பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி - சென்னை - 4
11.08.2025 6.45
திங்கட்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- புதிதாக தொடங்கப்பட்டுள்ள 3 வந்தே பாரத் ரயில் சேவை, சுற்றுலா, வர்த்தகம் மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.
- கேலோ இந்தியா போட்டிகள், விளையாட்டுத் துறையில் பெண்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் என்று மத்திய இணையமைச்சர் திருமதி ரக்ஷா கட்சே தெரிவித்துள்ளார்.
- திமுக அரசு வெளியிட்டுள்ள மாநில கல்விக் கொள்கையில் புதிதாக எதுவும் இல்லை என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.
- 20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மகளிர் ரக்பீ சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

புதிதாக தொடங்கப்பட்டுள்ள 3 வந்தே பாரத் ரயில் சேவை, சுற்றுலா, வர்த்தகம் மற்றும் போக்குவரத்து இணைப்பு வசதிகளை மேம்படுத்தும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பெங்களூரு - பெலகாவி, அமிர்தசரஸ் - மாதா வைஷ்ணவ் தேவி கத்ரா, நாக்புர் - புனே இடையே இந்த ரயில் சேவைகள் தொடங்கப்பட்டது குறித்து தமது சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று பெங்களூரு மெட்ரோ ரயிலின் புதிய வழித்தடம், தகவல் தொழில்நுட்பத்துறையில் பணியாற்றுவோருக்கு பெரிதும் பயனளிப்பதுடன் போக்குவரத்து நெரிசலையும் குறைக்கும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<>>>>

உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்தியா தற்போது 4வது பெரிய பொருளாதார நாடாக உள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கு பெருமளவு ஆதரவளிக்க வேண்டியதன் அவசியத்தையும் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

மத்திய அரசு மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளால் எரிசக்தி துறை சிறப்பான வளர்ச்சியைக் கண்டு வருவதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், உலக அளவில் பொருளாதார மந்தநிலை நிலவியபோதிலும் இந்தியாவில் எண்ணெய் சுத்திகரிப்பு திறன் ஆண்டுக்கு 258 மில்லியன் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பெட்ரோலியப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுவதுடன், குஜராத் மாநிலம் ஜாம்நகரில் ஆசியாவின் மிகப்பெரிய சுத்திகரிப்பு ஆலை அமைக்கப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இரண்டரை லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் புதிதாக எண்ணெய் மற்றும் எரிவாயு எடுப்பதற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கேலோ இந்தியா அஸ்மிதா கால்பந்துப் போட்டிகள், விளையாட்டுத் துறையில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்யும் என்று மத்திய விளையாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி ரக்ஷா கட்சே தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிர மாநிலம் ஜல்காவ்னில் இந்தப் போட்டிகளை தொடங்கி வைத்துப் பேசிய அவர், கால்பந்து விளையாட்டில் சிறந்து விளங்கும் இளம் பெண் திறமையாளர்களை கண்டறிந்து அவர்களது திறமையை ஊக்குவிப்பதே இதன் நோக்கம் என்றார்.

பழங்குடியினர் மற்றும் சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த ஆர்வமுள்ள வீராங்கனைகளின் விளையாட்டுத் திறனை வெளிப்படுத்தவும் இந்தப் போட்டிகள் உதவிகரமாக அமையும் என்று திருமதி ரக்ஷா கட்சே நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

திமுக அரசு வெளியிட்டுள்ள மாநில கல்விக் கொள்கையில் புதிதாக எதுவும் இல்லை என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மொழி சம்பந்தமான அம்சங்கள் தவிர பிற அம்சங்கள் அனைத்தும், மத்திய அரசின் தேசியக் கல்விக் கொள்கையில் இடம்பெற்றிருப்பதாக தெரிவித்தார்.

பீஹார் வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக தேர்தல் ஆணையம் விளக்கம் அளித்துள்ள நிலையில், எதிர்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் ஆணையத்தை நோக்கி பேரணி நடத்துவது தேவையற்றது என்றும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

<<<<>>>>

கோவை பாரதியார் பல்கலைக்கழக மொழியியல் துறை சார்பில் நடைபெற்ற பயிற்சிப் பட்டறையில் மலேசியாவின் மலாய் பல்கலைக்கழக மாணவர்கள் பங்கேற்றனர்.

பயிற்சியின் ஒரு பகுதியாக நீலகிரியில் உள்ள தோடர் பழங்குடியின மக்களின் மொழி, கலாச்சாரம் மற்றும் வாழ்வியல் முறைகளை நேரில் அறிந்துகொண்டதாக இதில் பங்கேற்ற மாணவி ஒருவர் தெரிவித்தார்.

பழங்குடியின மக்களின் வாழ்வியல் முறைகள் மலேசிய மாணவர்களை பெரிதும் ஈர்த்துள்ளதாக பாரதியார் பல்கலைக்கழக பேராசிரியர் கூறினார்.

<<<<>>>>

*தொழில்துறையில் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ள பெண்களின் கவலை மற்றும் மன அழுத்தத்தை போக்கும் வகையில் சேலத்தில் கருத்தரங்கம் மற்றும் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது.*

*இந்த நிகழ்ச்சிகள் தங்களை ஊக்கபடுத்துவதாகவும், மனதிற்கு புத்துணர்ச்சி அளிப்பதாகவும் இருந்தது என்று இதில் பங்கேற்ற தொழில்முனைவோர் தெரிவித்துள்ளனர்.*

<<<<>>>>

*திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை அருகே பி.ஏ.பி. வாய்க்காலில் குளிக்கச் சென்ற 2 சிறுவர்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தது குறித்து முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.*

*மேலும் உயிரிழந்த சிறுவர்களின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்துள்ளார்.*

<<<<>>>>

*செங்கல்பட்டு, காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் இன்று இடியுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

*விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, கரூர், சேலம், நாமக்கல் மாவட்டங்களில் இன்று மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

*லண்டனில் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக போராட்டத்தில் ஈடுபட்ட 400க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டனர்.*

<<<<>>>>

*துருக்கி நாட்டின் மேற்குப் பகுதியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவில் 6 புள்ளி ஒன்றாக பதிவாகியுள்ளது.*

**<<<<>>>>**

*ஈராக்கில் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற்பட்ட குளோரின் வாயுக் கசிவு காரணமாக 600க்கும் அதிகமான யாத்ரீகர்களுக்கு சுவாசக் கோளாறு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*

**<<<<>>>>**

*மகாராஷ்டிர மாநிலம் தானேயில் இந்த ஆண்டு டிசம்பருக்குள் மெட்ரோ ரயில் சேவை தொடங்கும் என்று அம்மாநில துணை முதலமைச்சர் திரு. ஏக்நாத் ஷிண்டே தெரிவித்துள்ளார்.*

**<<<<>>>>**

*கரூர் அருகேயுள்ள நெரூர் அக்னீஸ்வரர் கோவில் நாத உற்சவ விழாவில் 300க்கும் அதிகமான நாதஸ்வர கலைஞர்கள் பங்கேற்று ஒரு நேரத்தில் இசைத்தனர்.*

**<<<<>>>>**

*திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் பர்வதமலை ஓடையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 2 பெண்கள் அடித்துச் செல்லப்பட்டனர். 50 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.*

**<<<<>>>>**

## *விளையாட்டுச் செய்திகள்*

*20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மகளிர் ரக்பீ சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.*

*பீஹாரில் நடைபெற்ற இப்போட்டியின வெண்கப் பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியா 12-5 என்ற புள்ளிக் கணக்கில் உஸ்பெகிஸ்தானை வென்றது.*

**<<<<>>>>**

*சென்னை கிராண்ட் மாஸ்டர் செஸ் போட்டியின் நான்காவது சுற்றில் இந்தியாவின் நிஹால் சரீன் அர்ஜுன் எரிகைசியை வென்றார்.*

<<<<>>>>

*சர்வதேச இளைஞர் தினத்தையொட்டி கிருஷ்ணகிரியில் நடைபெற்ற சிலம்ப போட்டியில், 9ஆம் வகுப்பு பயிலும் மாணவர் நிதிஷ் தொடர்ந்து 10 மணி நேரம் சிலம்பம் சுழற்றி உலக சாதனை படைத்துள்ளார்.*

<<<<>>>>

*திருவாரூர் மாவட்டம் வடுவூரில் நடைபெற்ற மாநில அளவிலான கபடிப் போட்டியில் சேலம் அணி முதல் பரிசை வென்றது.*

*இப்போட்டியில் சென்னை SRM பல்கலைக்கழக அணி இரண்டாம் பரிசையும், வடுவூர் அணி மூன்றாம் பரிசையும் பெற்றன.*

<<<<>>>>